தினமணி
30.06.2017

டிஎன்பிஎல் ஆலையின் சமுதாய மேம்பாட்டுப் பணி

# இலவச தொழிற்கல்வி பயில 5 மாணவர்கள் தேர்வு

கரூர், ஜூன் 29 : டிஎன்பிஎல் காகித ஆலையின் சமுதாய நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து 5 மாணவர்கள் திருச்சி சேஷாயி இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் இலவசமாக தொழிற்படிப்பு பயில தேர்வு செய்யப்படுவது வழக்கம். நிகழாண்டில் பயில தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஆவணக் கடிதம் வழங்கும் நிகழ்ச்சி ஜூன் 27 அன்று காகித ஆலை வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) வெங்கடராமகிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) சுப்ரமணியன், பொதுமேலாளர்(மனிதவளம்) பட்டாபிராமன் ஆகியோர் மாணவர்களுக்கு ஆவணக் கடிதத்தை வழங்கினர். நிகழ்ச்சியில் மாணவர்கள், அவர்களின் பெற்றோர் உள்ளிட்டோர் திரளாகப் பங்கேற்றனர்.



காகித ஆலை சார்பில் இலவச தொழிற்படிப்புக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஆவணக்கடிதத்தை வழங்கும் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) வெங்கடராமகிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) சுப்ரமணியன், பொது மேலாளர்( மனித வளம்) பட்டாபிராமன் உள்ளிட்டோர்.